திரு. எஸ்.எஸ். குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் அந்தியூரிலும், அம்மாப்பேட்டையிலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அவற்றிற்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் முன்பு சொன்ன அதே பதிலைத்தான் சொல்ல விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான், வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகங்களெல்லாம் படிப்படியாக சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன. 50 சதவீத அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆண்டொன்றிற்கு அரசாங்கத்திற்கு இரண்டு கோடி ரூபாய் வாடகையாகச் செலவு ஏற்படுகிறது. எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை அடிப்படையில் முன்னுரிமை அளித்து, வருங்காலத்தில் நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

145—

நெல் கொள்முதல் நிலையம்

***58448—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கோவைக்குளம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 6]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கோவைக்குளம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் 28-1-2010 அன்று திறக்கப்பட்டு, இதுவரையில் 313 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.*

திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியில், கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி, பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி, மகாதானபுரம், கோவைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் கிட்டத்தட்ட 200 எக்டர் பரப்பளவில் கோ-43, ஐ.ஆர்.-20, ஆடுதுறை-36 போன்ற சம்பாப் பருவப் பயிர் சாகுபடி செய்யப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் நெல்லை, அரசு சார்பில் கொள்முதல் செய்யும்போது, மோட்டா ரக நெல்லுக்கு குவின்டால் ஒன்றுக்கு 1,050 ரூபாயும், சூப்பர் ஃபைன் நெல்லுக்கு 1,100 ரூபாயும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் தனியாரோ வியாபாரிகளோ இதே பகுதியில் ரூபாய் 700-க்கும், ரூபாய் 800-க்கும் விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்றார்கள்.*

முற்பகல் 10-00

ஒரு ஏக்கருக்கு சராசரியாக 24 மூட்டை விளைச்சல் என்று வைத்துக்கொண்டாலும்கூட, அரசு கொள்முதல் செய்வதால் ஒரு விவசாயிக்கு குறைந்தபட்சம் 7,000 அல்லது 8,000 ரூபாய் அதிகமாக வருவாய் கிடைக்கிறது. தற்போது இந்த நெல் கொள்முதல் நிலையம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடவசதி அங்கு உள்ளது. எனவே, இப்பகுதியில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், கோவைக்குளம் பகுதியை மையமாக வைத்து நிரந்தரமாக நெல் கொள்முதல் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2010 மே 6

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தைப் பொறுத்த அளவிற்கு, குளித்தலை, நங்கவரம், நச்சநல்லூர், பணிக்கம்பட்டி, வாலாஜாபேட்டை, கோவைக்குளம் போன்ற பகுதிகளிலே ஏற்கெனவே நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவர் சொன்னதைப்போல், விவசாயிகளினுடைய நலனைக் கருதி நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அமைத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் வாங்குவதோடு ஆங்காங்கு இருக்கிற விவசாயிகள் கோரிக்கையை ஏற்று கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் அவர்களிடமிருந்து நெல் வாங்க வேண்டுமென்று இந்த ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு, இன்றைக்கு கூட்டுறவுத் துறை மூலமாகவும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இஃதன்னியில், ஒரு விவசாயி தன்னிடத்திலே 300 மூட்டைக்கு மேல் நெல் இருக்கிறது என்று சொன்னால், Mobile team நேரடியாகக் களத்திற்கே சென்று வாங்குகிற ஒரு நிலையை இந்த ஆண்டு அரசின் சார்பாக ஏற்பாடு செய்திருக்கிறோம். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ் அவர்கள் அந்தந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளை இதைப் பயன்படுத்திக்கொள்ளச் செய்ய வேண்டும். மேலும், வேறு எங்காவது அவசியம் தேவை என்று சொன்னால், அதற்கு இடத்தைத் தந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு நாளைய தினம்கூட நேரடிக் கொள்முதல் நிலையத்தை இந்த அரசு துவக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் பணி ஜனவரி 28-ல் ஆரம்பிக்கப்பட்டு ஏப்ரல் 28-உடன் முடிக்கப்பட்டுவிட்டது. அப்படி நெல் கொள்முதல் செய்யப்பட்ட இடங்களில் நச்சநல்லூர் பகுதியில் 151 டன்னும், நங்கவரத்தில் 294 டன்னும், கோவைக்குளம் பகுதியில் 312 டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டில் அதிகமாக நெல் கொள்முதல் செய்யும் இடமாக கோவைக்குளம் பகுதி இருக்கின்றது. இன்னும் நெல் வரத்து அங்கே அதிகமாக இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் 300 குவின்டாலுக்கு

2010 மே 6]

மேல் நெல் வைத்துள்ள விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் Mobile Unit மூலம் விவசாயிகள் இருப்பிடத்திற்கே சென்று நெல் கொள்முதல் செய்யும் திட்டத்தைக் கரூர் மாவட்டத்தில் அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை மூலமும் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால், கூட்டுறவுத் துறையில், கூட்டுறவு வங்கியில் இதற்குத் தேவையான பணியாட்கள் இல்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு, அதற்குத் தேவையான பணியாட்களை நியமிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு அதிகமாக விளைச்சல் இருக்கும், அதனால் அங்கே நேரடிக் கொள்முதல் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை, நான் கருத்திலே எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறி, அந்தப் பகுதியிலே உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய மேலாளரையும் அழைத்துப் பேசி, உறுப்பினர் தெரிவித்த தேவையின் அடிப்படையில் அந்தப் பகுதியிலே நேரடிக் கொள்முதல் நிலையம் அடுத்த ஆண்டு துவக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு மாதத்தினுடைய அரிசி நுகர்வு எவ்வளவு? அதிலே வறுமைக்கோட்டிற்கு மேலே, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் அரிசி நுகர்வு எவ்வளவு என்பதையும், மத்திய அரசாங்கத்தால் தமிழகத்திற்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு அரிசி ஒதுக்கப்படுகிறது என்ற விவரத்தையும், என்னென்ன வகையிலே ஒதுக்குகிறார்கள் என்ற விவரத்தையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2010 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்குட்டுவன், இதற்கென தனியாக ஒரு கேள்வி கொடுத்தால் சரியாக இருக்கும். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்தவரை 3 இலட்சத்து 17 ஆயிரம் டன் அரிசி ஒரு மாதத்திற்குத் தேவை. மத்திய அரசால் 2 இலட்சத்து 96 ஆயிரத்து 453 டன்கள்தான் ஒதுக்கப்படுகின்றன. அதிலும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்திற்கு 65 ஆயிரத்து 262 டன்னும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கென 1 இலட்சத்து 4 ஆயிரத்து 936 டன்னும், வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கென 1 இலட்சத்து 26 ஆயிரத்து 255 டன்னும், ஆக, மொத்தம் 2 இலட்சத்து 96 ஆயிரத்து 453 டன்கள்தான் ஒதுக்கப்படுகின்றன. மீதி இருக்கிற தேவையைப் பூர்த்தி செய்ய மாநில அரசு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி open market rate-ல் கொள்முதல் செய்கிறது. அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்திலே அரிசி கிலோ 3 ரூபாய்க்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு கிலோ 5 ரூபாய் 65 பைசாவுக்கும், வறுமைக்கோட்டிற்கு மேலே இருப்பவர்களுக்கு கிலோ 8 ரூபாய் 30 பைசாவுக்கும் மத்திய அரசு நமக்குத் தருகிறது.

தேவையில் துண்டு விழுகிறது. தேவையில் துண்டு விழுகிற அந்த அளவுக்கான அரிசியை மாநில அரசாங்கம் open market rate-இலே மத்திய உணவுக் கழகத்திலிருந்து பெறுகிறது. (குறுக்கீடு)

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட அவனியாபுரத்தின் அருகில் பல ஆயிரக்கணக்கான நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அங்கே விளையக்கூடிய நெல்லை அறுவடை செய்து, மதுரைக்கு எடுத்துச் சென்று விற்பதற்கு அவர்களுக்கு சிரமமாக இருக்கிறது. ஆகவே, அவனியாபுரத்திலே ஒரு நெல் கொள்முதல் நிலையத்தை அமைச்சர் அமைத்துக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அதிகாரத்தை அரசு வழங்கியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தொடர்பு கொண்டாலே இதைச் செய்ய முடியும். இருப்பினும், நாளையதினமே சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரையும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய மேலாளரையும் அழைத்து, அந்தப் பகுதியிலே போதுமான நெல் விளைச்சல் இருக்குமென்று சொன்னால், விவசாயிகளுக்கு உதவியாக, அந்தப் பகுதிகளுடைய நிலைமைகளை அறிந்து, போதுமான அளவிற்கு நெல் வரத்து இருக்கிறதா என்பதைப் பார்த்து, உடனடியாக அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையம் துவக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசினுடைய தொகுப்பிலிருந்து மாநில அரசுக்கு வழங்கப்படுகின்ற அரிசியினுடைய அளவைப் பற்றி இங்கே விரிவாகக் குறிப்பிட்டார்கள். சமீபத்தில் டெல்லிக்குச் சென்றிருந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பாரதப் பிரதமரையும், அன்னை சோனியா காந்தி அவர்களையும் சந்தித்து தமிழகத்திற்குக் கூடுதல் அரிசி வேண்டுமென்று கேட்டவுடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னைக்குத் திரும்புவதற்கு முன்னால் அந்த அரிசியை ஒதுக்கீடு செய்து தமிழகத்திற்கு அனுப்பியதாகத் தகவல் சொல்கிறார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது? நம்முடைய முதலமைச்சருடைய கோரிக்கையை ஏற்று, அவ்வளவு விரைவாக, உடனடியாகப் பெருமளவிலே அரிசியை ஒதுக்கிய மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் தங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற கேள்விக்குச் சொன்ன பதிலிலேயே சொன்னேன்; பொதுவாக, தமிழ்நாட்டினுடைய அரிசி நுகர்வு 3,17,000 மெட்ரிக் டன்கள். மத்திய அரசாங்கம் மாதா மாதம் நமக்கு ஒதுக்குவது 2,96,453 மெட்ரிக் டன்கள். ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம் தமிழகத்திலே தலைவர் கலைஞருடைய திருக்கரத்தாலே துவங்கப்பட்டதன் விளைவாக, அரிசியினுடைய நுகர்வு என்பது அதிகமாகியிருக்கிறது. அதனுடைய விளைவாக, சராசரியாக எடுத்துக்கொண்டால், மாதா மாதம் கிட்டத்தட்ட 25,000 டன்னிலிருந்து 27,000 டன் வரை நமக்குத் தேவை இருக்கின்றது. அந்தத் தேவை இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டைப் பொறுத்த அளவிற்கு சுமார் 2,37,000 டன் அரிசி மேலும் நமக்குத் தேவைப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போனபோது, காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய பெருந்தலைவியாக இருக்கிற நம்முடைய அன்னை சோனியா காந்தி அவர்களிடம் அதைப்பற்றி நேரடியாக முறையிட்டதன் விளைவாக, இம்மாதம் 3 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 4 ஆம் தேதி அதற்குரிய ஆணை நம்முடைய தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி சொன்னார்களா என்று கேட்டார்கள். எப்பொழுதும் தலைவர் கலைஞர் அவர்கள் எந்தக் காலத்திலும் நன்றி உள்ளவர். திருக்குறளுக்கு உரை எழுதியவர் அவர்; "நன்றியறிதல்" என்ற அதிகாரத்தையே எழுதியிருக்கிறார்கள். அதனால் எப்பொழுதும் இந்த அரசு மத்திய அரசிற்கு நன்றியுடையதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

பல்கலைக்கழகம்

***84249—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—